ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ்
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA
ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-1, சனவரி 2020

# கடிகைகள்

**மு.கயல்விழி**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி,**
**காஞ்சிபுரம்**, தமிழ்நாடு, இந்தியா.

---

## முன்னுரை

தொண்டை நாட்டை ஆண்ட மன்னர்கள் பல்லவர்கள். இவர்கள் கல்வி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கியவர்கள். பல்லவர் காலத்தில் வடமொழி ஆதிக்கத்தின் காரணமாய் வடமொழிக் கல்வி நிறுவனங்கள் தோன்றி வளர்ந்தன. இவை கடிகைகள் என்று சிறப்புடன் அழைக்கப்பட்டன. பல்லவர்கள் கலை, இலக்கியப் புரவலர்கள் என்பதால் தம் ஆட்சிப்பகுதியின் பல இடங்களில் கடிகைகளை நிறுவி கல்வி வளர்த்தனர். உலகப்புகழ் பெற்ற குப்தர்களின் நாளந்தா பல்கலைக்கழகத்தின் தலைவராகக் காஞ்சியைச் சார்ந்த தருமபாலர் திகழ்ந்தார் என்றால் காஞ்சியின் கல்விச் சிறப்பை விளக்க வேறுவார்த்தை இல. அத்தகு சிறப்பு வாய்ந்த காஞ்சியின் பல்லவர்கள் கடிகைகளை வளர்த்தனர், இக்கடிகைகள் நாட்டின் உயர்கல்வியை வளர்த்தன. இவற்றால் இதன் புகழ் இந்தியா முழுவதும் பரவியது.

## பல்லவர் காலக் கல்லூரிகள்

பல்லவர்கள், வடநாட்டினருடன் கொண்ட தொடர்பின் காரணமாய் வடமொழியையும், வேதங்களையும் நன்கு ஆதரித்தனர். இதனால் வடமொழிக் கல்லூரிகளை (கடிகைகளை) தமிழகத்தில் நிறுவினர். பல்லவர்களுக்கு முன் தமிழகத்தில் கடிகைகள் இருந்ததற்கான சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை. எனவே கடிகைகளைப் பல்லவர்கள் நிறுவினார்கள் என்பது உறுதி. கடிகை என்ற சொல்லுக்கு, “முயன்று அறிதல்“ என்பது பொருள். எனவே கடிகைகள் கல்வி அல்லது அறிவை முயன்று பெறும் இடமாக அக்காலத்தில் கருதப்பட்டது. இவை இன்றைய கல்லூரிகள் போன்ற உயர் கல்வி நிறுவனங்களாகும். இக்கடிகைகள் பற்றிய செய்திகளை முதன்முதலாக கடம்பமன்னன் காகுஷ்தவர்மனின் தாளகுண்டாக் கல்வெட்டுகளே அறிவிக்கின்றன. இக்கடிகைகளின் காலத்தை லீவிஸ்ரைஸ் (Lewis Rice) என்ற அறிஞர் கி.பி.450 என்கின்றார் ***(Epigraphica Indica, Volume 7, Page 200).*** புஹ்லர் (Buihler) கி.பி.400 என்கின்றார் ***(Indian Antiquary, Volume 25, Page 27).*** கீல்ஹார்ன் (Keilhorn) இதற்கு மாறுபட்டு கி.பி.6ஆம் நூற்றாண்டு என்று வரையறை செய்கின்றார் ***(Epigraphica Indica, Volume 8., Page 31).*** மோரிஸ் (Moreas) என்பார் கி.பி.345 முதல் கி.பி.370 வரை என்று கணிக்கின்றார் ***(Kadanba Kula., Page 14).*** எனவே கடிகையின் காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டு என்று வரையறை செய்யலாம்.

கீல்ஹார்ன் போன்ற ஆய்வாளர்கள், கடிகையைப் பிரம்மபுரியுடன் ஒப்பிடுகின்றனர் ***(Epigraphica Indica, Volume8, PAGE 26).*** பிரம்மபுரி என்பதற்கு விளக்கம் அளிக்கும் இவர்கள் பிராமணக் கவிஞர்கள், தத்துவ ஞானிகள், தர்க்க சாஸ்திரிகள், பேச்சாளர்கள் வாழும் இடத்தைக் குறிக்கும் என்கின்றனர். மேலும் சில ஆய்வாளர்கள் கடிகைகளைக் கற்றறிந்த பிராமணர்களின் கோஷ்டி (குழு) என்கின்றனர் ***(Epigraphica Indica, Volume8., Page 26).*** எனவே கடிகை என்பது பிராமணமாணவர்கள் கல்வி கற்கும் உயர்கல்விக்கூடம் என்பது உறுதி. இதை உறுதி செய்யக் கடம்ப இளவரசனும் பிராமணனுமான மயூரசிம்மன் உயர்கல்விப் பயில காஞ்சி வந்ததைக் கொள்ளலாம்.

தன் நாட்டில் இளநிலைக்கல்வி பயின்ற அவன் முதுநிலைக் கல்வி பயில காஞ்சி வந்தான் என்று கல்வெட்டுகள் சான்றளிக்கின்றன ***(Epigraphica Indica, Volume8., PAGE 26).*** பல்லவர்கள் தம் ஆட்சியின் பல பகுதிகளில் கடிகைகளை நிறுவினாலும் காஞ்சிபுரம், சோளிங்கபுரம், பாகூர் போன்ற இடங்களில் செயல்பட்ட கடிகைகளைப் பற்றி மட்டும் சான்றுகள் கிடைத்துள்ளன. இக்கடிகைகள் பல்லவ மன்னர்களின் முழு ஆதரவையும் பெற்றுச் செயல்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளன. இங்கு கல்வி பயின்ற மாணவர்களுக்கு உணவும், உடையும், இருப்பிடமும் இலவசமாய் வழங்கப்பட்டன. இதுதவிர கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும் நல்ல ஊதியம் வழங்கப்பட்டது. இது “பட்டவிருத்தி” என்று அழைக்கப்பட்டது. ஆரம்பக்கல்வியை உள்ளூரில் பயின்ற சிறார்கள் உயர்கல்வி பெறுவதற்குக் கடிகைகளை நாடிச் சென்றனர். கல்விபெற வந்த மாணவர்கள் நன்கு சோதித்தறிந்த பின்னரே கல்லூரியில் சேர்த்துக் கொள்ளபட்டனர். தமிழ்நாட்டில் பல்லவர் தோற்றுவித்தது போன்ற கடிகைகள் தென்னிந்தியாவின் பல பகுதிகளில் செயல்பட்டதற்கு சான்றுகள் உள்ளன. ***(Epigraphica Carnatica, Volume 23, Page 111 & Epigraphica Indica, Volume 4, Page 19).***

ISSN NO.2581-5938
மலர்-3, இதழ்-1, சனவரி 2020

**காஞ்சிக்கடிகை**

காஞ்சியின் கடிகை பல்லவர்களின் சிறப்புக்கு காரணமாய் அமைந்தது. சங்ககாலத்தில் கடிகைகளைப் பற்றி சான்றுகள் இல்லாததாலும், அடுத்து வந்த களப்பிரர் காலம் இருண்ட காலம் என்பதாலும், அதன் தொடர்ச்சியாய் வந்த பல்லவர் காலத்தில் இக்கடிகைளைப் பற்றி தெரிய வருவதாலும் இக்கருத்து உறுதியாகின்றது. இக்காஞ்சிக் கடிகையைப் பல கல்வெட்டுகள் புகழ்ந்துரைக்கின்றன. காசாக்குடிச் செப்பேடுகள் "ஸ்வகடிகம்பூதேவம்" (Sva Gattikam Bhudevatam) என்கின்றது ***(South Indian Inscriptions, Volume 2, Page 349).*** இதன்பொருள் தேவர்கள் பூமியில் வாழுமிடம் என்பதாகும். வேலூர் பாளையச் செப்பேடுகள் "திக்னம்கடிகம்" (Dvijanam Ghatikam) என்றுபுகழ்கின்றது ***(South Indian Inscriptions, Volume 2, Page 508).*** இதன்பொருள் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டது என்பதாகும். மேலும் வைகுண்டபெருமாள் கோவில் கல்வெட்டு இங்கு பயின்ற மாணவர்களையும், ஆசிரியர்களையும் "மஹாஜனம்" (Maha Janams) என்கின்றது. ***(South Indian Inscriptions, Volume 7, Page 10).*** இதன்பொருள் உயர்குடியினர் என்பதாகும்.

கடிகைகள் அக்காலத்தில் மிகவும் போற்றுதற்குரிய இடமாகக் கருதப்பட்டது ***(Epigraphica Indica, Volume 3, Page 360).*** இக்கடிகையின் புகழ் தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்ததைக் கடம்பநாட்டு இளவரசன் மயூரசிம்மனும், அவனது ஆசிரியன் வீரசர்மன் என்பவனும், இக்கல்லூரிக்கு நெடுந்தொலைவைக் கடந்துவந்து கல்வி பயின்றதைக் கொண்டு அறியலாம். இவன் படிக்கும் காலத்தில் சத்திரிய இனத்தைச் சார்ந்த படைவீரர்களால் இவன் அவமானப்படுத்தப்படவே பல்லவர்களை பழிவாங்க வேண்டுமென்று உறுதி பூண்டான் என்று தாளகுண்டாக் கல்வெட்டு உரைக்கிறது.

இவ்வாறு மிகவும் புகழ்பெற்ற இக்கடிகையில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை உறுதியாக தெரியவில்லை. திருவலம் கல்வெட்டு இங்கு பயின்றவர்கள் எழாயிரம் என்கின்றது ***(South Indian Inscriptions,*** **Volume 3, *Page* 91**). வேறு சில கல்வெட்டுகள் மூவாயிரம் என்கின்றன. எனவே ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு பயின்றனர் என்று வரையறை செய்யலாம். மேலும் இக்கடிகை காஞ்சியில் எப்பகுதியில் செயல்பட்டது என்பது குறித்தும் வெளிப்படையானச் சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் இராஜசிம்ம பல்லவனின் கைலாசநாதர் கோயில் கல்வெட்டுகள் இவன் இராஜசிம்மேஸ்வரத்தில் கடிகை மண்டபத்தைப் புதுப்பித்தான் என்று உரைக்கிறது ***(Epigraphica Indica, Volume 3, Page 349).*** எனவே இன்று கைலாசநாதர் கோயில் என்ற பெயருடன் அழைக்கப்படும் இராஜசிம்மேஸ்வரக் கோயிலில் கடிகை செயல்பட்டது புலனாகின்றது. மேலும் இக்கல்வெட்டு இங்கு "பரவாஹனம்" (Pravacanam) (தர்க்கசாத்திரம்) போதிக்கப்பட்டதாகச் சான்றளிக்கின்றது. எனவே காஞ்சிக்கடிகை இங்கு செயல்பட்டதும் வேதங்கள் நன்கு ஆராயப்பட்டதும் உறுதியாகின்றது. இங்கு 1.வேதாந்த சாஸ்திரங்கள், 2.வேதாங்கங்கள், 3.ஆயுர்வேதம், 4.சில்பவேதம், 5.தனுர்வேதம், 6.கந்தர்வவேதம், 7.இதிகாசம், 8.புராணம், 9.யோகம், 10.தர்க்கம், 11.தத்துவம் 12.சோதிடம், 13.வானவியல், 14.அரசியல், 15.போர் தந்திரங்கள் போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன.

.

இக்கல்லூரி உண்டு உறைவிடக் கல்லூரியாய் செயல்பட்டது. இங்கு பயின்ற மாணவர்களுக்கு உணவும் உடையும் அரசு வழங்கியது. இச்செலவை ஈடுசெய்ய நிலங்கள் மானியங்களாகக் கடிகைக்கு வழங்கப்பட்டன. புகழ்பெற்ற பல்லவ மன்னர்களான சிவஸ்கந்தவர்மன், பரமேஸ்வரவர்மன், இராஜசிம்மன் மற்றும் முதலாம் நந்திவர்மன் போன்றோர் இக்கடிகைக்கு பேராதரவு நல்கினர் ***(Epigraphica Indica, Volume 2, Page 356).*** இக்கடிகையில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு பட்டவிருத்தி நிலங்கள் வழங்கப்பட்டன. இவர்கள் சமூகத்தில் மிகவும் உயர்வாக மதித்துப் போற்றப்பட்டனர். பல்லவ மன்னர்களை தேர்ந்தெடுக்கும் உயர் அதிகாரக்குழுவில் இவ் ஆசிரியர்கள் இடம் பெற்றிருந்தது இதை உறுதி செய்யும் ***(South Indian Inscriptions, Volume 4, Page 26).***

**சோளிங்கபுரம் கடிகை (கடிகாச்சலம்)**

பல்லவர் காலத்தில் மற்றொரு கடிகை இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கபுரத்தில் செயல்பட்டது. இக்கடிகையின் சிறப்பு காரணமாய் இவ்வூர் கடிகாச்சலம் என்று அழைக்கப்பட்டது. இது ஒரு வைணவத்தலம் என்பதுடன் இங்குள்ள மலையின் மேல் கடிகை செயல்பட்டதை கல்வெட்டுகளும், இலக்கியங்களும் உறுதி செய்கின்றன. பிரம்மதேசத்தில் உள்ள பார்த்திவேந்திராதிபதியின் கல்வெட்டுகள் இக்கடிகையை "திரை இராஜ்ய கடிகமத்தியஸ்தன்" என்று புகழ்கின்றது***(Annual Report on Indian Epigraphy, No.194/1915&195/1915&197/1915).*** மேலும் இம்மலையைப் புகழப் போந்த திருமங்கையாழ்வார் தன்னுடைய சிறிய திருமடலில் இம்மலையைக்

"கடிகை கடன்மலை" என்று புகழ்கின்றார். இவற்றால் இம்மலையில் கடிகை செயல்பட்டது உறுதியாகின்றது. இதை தொட்டாச்சாரி என்ற புகழ்பெற்ற வேதப்பண்டிதர் நடத்தி வந்தார். இக்கடிகையில் மாணவர்களுக்கு வேதங்கள் போதிக்கப்பட்டன. பிற்காலத்தைச் சார்ந்த புகழ்பெற்ற இசைமேதையான முத்துஸ்வாமி தீட்ஷிதர் இம்மலையின் தெய்வத்தை "கடிகாசலீஸ்வரா" என்று புகழ்ந்துரைப்பதை எண்ணிப்பார்க்கலாம்.

**பாகூர் கடிகை**

பாண்டிசேரிக்கு அருகில் உள்ள பாகூரில் இக்கடிகை கி.பி.8ஆம் நூற்றாண்டில் செயல்பட்டது. இதைப் பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின் கல்வெட்டு சான்றளிக்கின்றது ***(Epigraphica Indica, Volume 18, Page 11).*** கல்வெட்டுகள் இதை "வாஹீர்" (Vaheer) என்கின்றன. இக்கல்லூரி செயல்பட செட்டுப்பாக்கம், விளாங்காட்டான் கடுவனூர் மற்றும் இறைப்பணஞ்சேரி என்ற மூன்று கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டன. இக்கிராமங்களின் வருவாய்கள் அனைத்தும் இக்கல்லூரிக்கே செலவிடப்பட்டன. இக்கல்லூரியைக் கண்காணிக்க மார்த்தாண்டன் என்ற நிலைதாங்கியும், உத்தமசீலி என்ற அஞ்சனபதி போன்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் ***(Epigraphica Indica, Volume 18, Page 10).*** இங்கு பயிலும் மாணவர்களுக்கு, 1.வேதங்கள் 2.வேதாகமங்கள் 3.புராணங்கள் 4.மீமாமம்சைகள் 5.நியாய முறைகள் 6.தரும சாஸ்திரங்கள் 7.அங்கங்கள் 8.ஆயுர்வேதம் 9.கந்தர்வவேதம் 10.அர்த்தசாஸ்திரம் போன்ற சாஸ்திரங்களும், கலைகளும் போதிக்கப்பட்டன ***(South Indian Inscriptions, Volume 2, Page 516).*** இந்தக் கல்லூரி உண்டு உறைவிடக் கல்லூரியாகச் செயல்பட்டது.

**நிறைவுரை**

"கல்வியில் கரையில்லாக் காஞ்சி" என்று அப்பர்சுவாமிகள் காஞ்சியின் கல்விச்சிறப்பை பாராட்டிச் செல்கின்றார். அத்தகு சிறப்பு வாய்ந்த காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் பல்லவர்கள். அவர்கள் கலை இலக்கியப் புரவலர்கள். அவர்கள் கல்விக்கு இடையறாது ஆக்கமும் ஊக்கமும் நல்கியவர்கள். குப்தர்காலத்தில் சிறப்புபெற்ற நாளந்தாப் பல்கலைக்கழகத்தைப் போன்றதொரு உயர்கல்வி நிறுவனத்தை பல்லவ நாட்டிலும் ஏற்படுத்தி அதன் புகழை நாடு முழுவதும் பரவச் செய்தனர். கல்வி கற்க வரும் மாணவர்களுக்கு வறுமை ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக அவர்களுக்கு உணவும் உடையும் இருப்பிடமும் வழங்கினர். கல்வி சிறக்க ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியமும் வழங்கப்பட்டது. இவற்றால் கல்விக்கு பல்லவ மன்னவர்கள் எத்துணை முக்கியத்துவம் வழங்கினர் என்பது புலனாகின்றது. இன்று நமது நாட்டு அரசுகள் கல்விக்குச் செலவிடும் நலதிட்டங்கள் யாவற்றுக்கும் பல்லவ அரசே முன்னோடியாகத் திகழ்ந்தது. கல்விக்கு செலவிடும் ஒவ்வொரு தொகையும் செலவினமன்று, மாறாக நிரந்தர எதிர்கால முதலீடு என்பதை முதன்முதலாய் உலகுக்கு உணர்த்தியவர்கள் பல்லவ மன்னர்களே என்பது மிகையன்று. .உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களாக வட இந்தியாவின் நாளந்தா, விக்கிரமசீலா, தட்ஷசீலா, வாலபி போன்றவை கொண்டாடப்படுகின்றன. ஆனால் அது போன்று தமிழகத்தில் செயல்பட்ட கல்வி நிறுவனங்களையோ அதை நிறுவிய பல்லவர்களைப் பற்றியோ அதிகம் அறியக்கூடவில்லை. எவ்வாறெனினும் 1500 ஆண்டுகளுக்கு முன்பே கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்து நாடு முழுவதும் கல்வி நிறுவனங்களைப் போற்றிப் புரந்த பல்லவ வேந்தர்களைக் கல்வியே நாட்டின் கண்கள் என்றுணர்ந்த இந்த நவீன யுகத்திலும் பாராட்டாமல் இருக்க இயலவில்லை.

## KADIGAIS

**M. Kayalvizhy**

Education is the basic need of humans. It is the primary duty of the Government to provide good education to their subjects. So, they follow various methods to provide it. The Tamil kings well realised it and took necessary actions to improve education in Tamil Nadu. For that they established number of educational institutions all over. The Pallava kings were the first rulers to build universities in Tamil Nadu. It was called as Kadigais. This kadigais got fame all over India for that.